# பகுதி-இ – பொதுத் தமிழ்

## Part-C – General Tamil

**வினாக்கள் : 141–200**

**Questions : 141–200**

141. ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய சரியான பொருளை அறிந்து விடையைத் தெரிவு செய்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | ஐ | 1. | கொன்றை |
| (b) | ஓ | 2. | யானை |
| (c) | ஔ | 3. | நுண்மை |
| (d) | நூ | 4. | பூமி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

142. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

கோல், கோழ், கோள்

(A) அம்பு, இலந்தை, கம்பு

(B) செழிப்பு, வளம், விழுங்கல்

(C) அழகு, வழுவழுப்பு, இடையூறு

(D) கிரகம், குறளை, பழமொழி

(E) விடை தெரியவில்லை

143. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

Doubt

வியாழம், வியாளம்

(A) பெரியது, காமநோய்

(B) பாம்பு, புலி

(C) செடி, ஒளி

(D) உயர்வு, வேண்டாத ஒன்று

(E) விடை தெரியவில்லை

144. "Aesthetician" – என்ற ஆங்கிலச் சொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல்

(A) நுண்கலை ஆய்வாளர்
(B) தொல்லியல் ஆய்வாளர்
(C) திரைக்கலைஞர்
(D) அழகுக்கலைஞர்
(E) விடை தெரியவில்லை

145. பிழைகளற்ற தொடரைத் தேர்வு செய்க.

(A) மட்டுவார் குழலி மணத்தக்காளி பொறியல் செய்தாள்
(B) மட்டுவார் குழளி மணத்தக்காளி பொரியல் செய்தாள்
(C) மட்டுவார் குழலி மணித்தக்காளி பொரியல் செய்தாள்
(D) மட்டுவார் குழளி மணித்தக்காளி பொரியல் செய்தாள்
(E) விடை தெரியவில்லை

146. மரபுச் சொற்களைப் பொருத்துக :

| | விலங்குகள் | | இளமைப்பெயர்கள் |
|---|---|---|---|
| (a) | எலி | 1. | குருளை |
| (b) | யானை | 2. | மறி |
| (c) | குதிரை | 3. | குட்டி |
| (d) | நாய் | 4. | கன்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

147. எதிர்ச்சொல்லை கண்டறிக :

கேளார்

(A) பகைவர்

(B) செற்றார்

(C) கேட்டார்

(D) வெறுப்புற்றார்

(E) விடை தெரியவில்லை

148. 'அகலாது' — என்பதன் எதிர்ச்சொல்

(A) விலகாது

(B) பிறழாது

(C) மறையாது

(D) அணுகாது

(E) விடை தெரியவில்லை

149. பிரித்தெழுதுக:

கண்டெடுக்கப்பட்டுள்ளன

(A) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன

(B) கண்டெடுக்க + பட்டுள்ளன

(C) கண் + டெடுக்க + பட்டுள்ளன

(D) கண்டெடுக்க + பட்டு + உள்ளன

(E) விடை தெரியவில்லை

150. பிரித்தெழுதுக:

பாகற்காய்

(A) பாகற் + காய்

(B) பாகல் + காய்

(C) பாகு + அல் + காய்

(D) பாகு + அல்காய்

(E) விடை தெரியவில்லை

151. "வாழ வேண்டுமெனில் – தொழில்கள்
வளர வேண்டுமையா"

என்னும் கூற்றினை எழுதியவர்

(A) பாரதிதாசன்

(B) குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

(C) பாரதியார்

(D) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

(E) விடை தெரியவில்லை

152. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | புலவர் சிங்கம் | 1. | மே.வீ. வேணுகோபாலன் |
| (b) | தற்கால அகத்தியர் | 2. | நக்கீரர் |
| (c) | இலக்கணத் தாத்தா | 3. | கி.வா. ஜகந்நாதன் |
| (d) | சிலேடை மன்னர் | 4. | க. வெள்ளைவாரணன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

153. 'ஆலாபனை' என்னும் நூலின் ஆசிரியர் – கண்டறிக.

(A) ஜெயகாந்தன்

(B) வைரமுத்து

(C) அப்துல் ரகுமான்

(D) ஈரோடு தமிழன்பன்

(E) விடை தெரியவில்லை

154. "எதிர்த்த பகையை இளைதாய போழ்தே

கதித்துக் களை" – என்பதில் இடம்பெறும் பொருள்

(A) ஊர் கூடி தேரிழுத்தல்

(B) தனிமரம் காடாதல் இல்லை

(C) உறவாடி பகைகெடுத்த கதையாக

(D) உவர் நிலம் உட்கொதிக்குமாறு

(E) விடை தெரியவில்லை

155. "புலமிக் கவரைப் புலமை தெரிதல்

புலமிக் கவர்க்கே புலனாம்" – இப்பாடலடிகள் உணர்த்தும் பழமொழி.

(A) தவளை தன் வாயால் கெடும்

(B) பாம்பின் கால் பாம்பறியும்

(C) குலவித்தை கல்லாமலே அமையும்

(D) நிறைகுடம் நீர் தழும்பாது

(E) விடை தெரியவில்லை

156. "தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்

எந்தீமை யென்றே உணர்பதாம்" – தொடர்புடைய பழமொழி.

(A) உறவாடிக் குடிகெடுத்த கதையாக

(B) ஆடு நனையுதென்று ஓநாய் அழுததாம்

(C) ஆடு பகை குட்டி உறவு

(D) ஒருவர் பொறை இருவர் நட்பு

(E) விடை தெரியவில்லை

157. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்:

| | | | |
|---|---|---|---|
| (a) | உடும்பு பிடி போல | 1. | விலகுதல் |
| (b) | பசுமரத்தாணி போல | 2. | உறுதி |
| (c) | மலரும் மணமும் போல | 3. | ஆழமாக பதிதல் |
| (d) | பகலவனைக் கண்ட பனி போல | 4. | இணை பிரியாமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

158. 'கலம்பாலில் துளி நஞ்சு போல' என்ற உவமைத்தொடர் உணர்த்தும் கருப்பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) நன்மை

(B) நட்பு

(C) தீமை

(D) உறவு

(E) விடை தெரியவில்லை

159. உவமைத் தொடர்களை பொருளோடு பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | இடியோசை கேட்ட நாகம் போல | 1. | நிலைத்திருத்தல் |
| (b) | கலம் பாலில் துளி நஞ்சு போல | 2. | மிரட்சி |
| (c) | மழைமுகம் காணாப் பயிர்போல | 3. | வன்மம் |
| (d) | கல்மேல் எழுத்துப் போல | 4. | ஏக்கம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

160. மழை பெய்தால் நெல் விளையும் – இத்தொடர் எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக.

(A) உணர்ச்சி வாக்கியம்

(B) விழைவு வாக்கியம்

(C) செய்தி வாக்கியம்

(D) வினா வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

161. போர்கள் நாட்டைப் பாழாக்குகின்றன. - ஏற்ற வினாவினைத் தேர்க.

(A) போர்கள் எவ்வாறு பாழாக்குகின்றன?

(B) போரின் விளைவு யாது?

(C) நாடுகள் எவற்றால் பாழாக்கப்படுகின்றன?

(D) எவை நாட்டைப் பாழாக்குகின்றன?

(E) விடை தெரியவில்லை

162. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

ஆதிக்கம் செலுத்துகிற மொழி, குயிலாகக் கூவி வந்தாலும், மயிலாக ஆடி வந்தாலும் மயங்கிடோம்.

(A) குயிலும் மயிலும் என்ன செய்யும்?

(B) மயங்காதவர் யார்?

(C) ஆதிக்கம் செலுத்துகிற மொழி எப்படி வரும்?

(D) எதைக் கண்டு மயங்கிடோம்?

(E) விடை தெரியவில்லை

163. வினையாலணையும் பெயரைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கற்றோர் | 1. | முன்னிலை ஒருமை வினையாலணையும் பெயர் |
| (b) | வந்தேனை | 2. | படர்க்கை வினையாலணையும் பெயர் |
| (c) | வந்தாயை | 3. | உயர்திணை வினையாலணையும் பெயர் |
| (d) | வந்தானை | 4. | தன்மை ஒருமை வினையாலணையும் பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

164. அடிக்கோடிடப்பட்டுள்ள சொல்களுக்கான இலக்கணக் குறிப்புகளுடன் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | எனக் கூறினான் | 1. | குறிப்பு வினையெச்சம் |
| (b) | காணாது சென்றான் | 2. | வினையெச்சம் |
| (c) | இனிது பேசினாய் | 3. | நிகழ்கால வினையெச்சம் |
| (d) | படிக்க வேண்டுகிறான் | 4. | எதிர்மறை வினையெச்சம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

165. "பலநாள்கள் தேடி இன்றுதான் யாப்பிலக்கணம் வாங்கினேன்" என்பதில் 'யாப்பிலக்கணம்' என்பதின் இலக்கணக் குறிப்பு யாது?

(A) தொழிலாகு பெயர்

(B) பொருளாகு பெயர்

(C) கருவியாகு பெயர்

(D) காரியவாகு பெயர்

(E) விடை தெரியவில்லை

166. பொருத்துக :

(a) பொன்னி
(b) மண்ணகத்தி
(c) மூவாட்டையாள்
(d) திணிதோளி

1. இடத்தால் வரு பெயர்
2. சினையால் வரு பெயர்
3. பொருளால் வரு பெயர்
4. காலத்தால் வரு பெயர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

167. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்.
விருந்து ஆயினும் உவக்கும் அல்லில் வரின்.

(A) அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்.
(B) உவக்கும் விருந்து ஆயினும் வரின் அல்லில்.
(C) அல்லில் வரின் ஆயினும் உவக்கும் விருந்து.
(D) விருந்து உவக்கும் ஆயினும் அல்லில் வரின்.
(E) விடை தெரியவில்லை

168. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.
கருதிச் செயல் காலமும் அளவும் பிணியளவும் கற்றான் உற்றான்.

(A) கற்றான் பிணியளவும் காலமும் உற்றான் அளவும் செயல் கருதி
(B) உற்றான் அளவும் பிணியளவும் காலமும் கற்றான் கருதிச் செயல்
(C) காலமும் பிணியளவும் உற்றான் கற்றான் கருதிச் செயல் அளவும்
(D) பிணியளவும் கருதிச்செயல் காலமும் கற்றான் அளவும் உற்றான்
(E) விடை தெரியவில்லை

169. 'வெல்' என்ற வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் யாது?

(A) வென்று வந்தான்

(B) வென்றவன்

(C) வெற்றிபெற்ற

(D) வெற்றிபெறும்

(E) விடை தெரியவில்லை

170. 'உறுகண்' என்ற சொல்லின் வேர்ச்சொல் கண்டறிக :

(A) உற்

(B) உறு

(C) உறை

(D) உறுதல்

(E) விடை தெரியவில்லை

171. கா – எனும் ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள்.

(A) அரசன்

(B) காற்று

(C) துலாக்கோல்

(D) மயில்

(E) விடை தெரியவில்லை

172. சரியான பொருள் தரும் ஓரெழுத்து ஒரு மொழியைத் தேர்க.

(A) பை – அச்சம்

(B) பா – தொண்டி

(C) மை – மலடு

(D) மா – மேலிடம்

(E) விடை தெரியவில்லை

173. ஒலி வேறுபாடறிந்து சரியான விடையைத் தெரிவு செய்க :

| | | | |
|---|---|---|---|
| (a) | வெலி | 1. | அறிவின்மை |
| (b) | வெல்லி | 2. | ஆகாயம் |
| (c) | வெள்ளி | 3. | பலி |
| (d) | வெளி | 4. | சிற்றேலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

174. Nautilus – என்னும் சொல்லின் தமிழ்ச்சொல்

(A) நண்டு வகை

(B) இறால் வகை

(C) மீன் வகை

(D) நத்தை வகை

(E) விடை தெரியவில்லை

175. 'Aristology' என்னும் ஆங்கிலச் சொல்லின் பொருள்

(A) நுண்கலை

(B) உணவுக்கலை

(C) கவின்கலை

(D) கட்டடக்கலை

(E) விடை தெரியவில்லை

176. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) பொறுத்தாரைப்பொன்னைப் பொதிந்து வைத்தார் போல போற்றுவார் உலகத்தார்

(B) பொறுத்தாரைப் பொன்னைப் பொதிந்து வைத்தாற் போலப் போற்றுவார் உலகத்தார்

(C) பொறுத்தாரை பொன்னைப் பொதிந்து வைத்தாற் போலப் போற்றுவார் உலகத்தார்

(D) பொறுத்தாரைப் பொன்னை பொதித்துப் வைத்தாற் போலப் போற்றுவார் உலகத்தார்

(E) விடை தெரியவில்லை

177. பொருந்தாத இணையைக் கண்டறிக :

(A) ஆளை – அறுகம்புல்

(B) இதல் – கௌதாரி

(C) உழை – ஆண்மான்

(D) ஊழை – தீ நாற்றம்

(E) விடை தெரியவில்லை

178. பிழையான இணையைக் கண்டறிக.

(A) அளகம் – பன்றிமுள்

(B) அலகம் – யானைத்திப்பிலி

(C) அலவன் – ஆண் நண்டு

(D) அலத்தி – நெய்தல் நிலப்பெண்

(E) விடை தெரியவில்லை

179. 'நிலமடந்தைக் கெழிலொழுகும்' – இச்சொல்லைப் பிரித்தெழுதுக.

(A) நிலமடந்தை + கெழில் + ஒழுகும்

(B) நிலம் + மடந்தை + கெழில் + ஒழுகும்

(C) நிலம் + மடந்தை + எழில் + ஒழுகும்

(D) நிலமடந்தை + கெழிலொழுகும்

(E) விடை தெரியவில்லை

180. தொல்காப்பியரின் வைப்பு முறைப்படி முல்லையோ நிலநூல் முறைப்படி குறிஞ்சியோ முதலில் இடம்பெறாமல் மருதத் திணையை முதலில் வைத்துப் பாடிய எட்டுத்தொகை நூல் எது?

(A) குறுந்தொகை

(B) நற்றிணை

(C) ஐங்குறுநூறு

(D) கலித்தொகை

(E) விடை தெரியவில்லை

181. "மாதமோ சித்திரை; மணியோ பத்தரை; உங்கள் கண்களைத் தழுவுதே நித்திரை" என்ற அடிகளுக்கு உரியவர் யார்?

(A) அறிஞர் அண்ணா

(B) கலைஞர். மு. கருணாநிதி

(C) மாங்குடி மருதனார்

(D) நக்கீரர்

(E) விடை தெரியவில்லை

182. எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் எந்தப் படைப்பிற்காக சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது?

(A) சாய்வு நாற்காலி

(B) கையொப்பம்

(C) சஞ்சாரம்

(D) காந்தள் நாட்கள்

(E) விடை தெரியவில்லை

183. பொருத்துக :

(a) அநுக்கம் — 1. குதிரை

(b) உன்னி — 2. ஆண் முதலை

(c) ஏணம் — 3. பாம்பு

(d) கரா — 4. மான்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

184. பழமொழியினை நிறைவு செய்க.

வாழ்கிறதும் கெடுகிறதும் ——————.

(A) கையிலேதான்

(B) வாயிலேதான்

(C) மனதிலேதான்

(D) எண்ணத்திலேதான்

(E) விடை தெரியவில்லை

185. "பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்" இவ்வடியில் இடம்பெற்றுள்ள மோனை வகை

(A) கூழை மோனை
(B) பொழிப்பு மோனை
(C) மேற்கதுவாய் மோனை
(D) முற்று மோனை
(E) விடை தெரியவில்லை

186. ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான் – இத்தொடர்களில் இடம்பெறும் மோனைச் சொற்களைக் கண்டறிக.

(A) ஞானச்சுடர் விளக்கு – நாரணற்கு
(B) ஞானத்தமிழ் – புரிந்த
(C) ஞானத்தமிழ் – நான்
(D) ஞானச்சுடர் விளக்கு – ஞானத்தமிழ்
(E) விடை தெரியவில்லை

187. செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
இப்பாடலடிகளில் இடம்பெறும் இயைபுச் சொற்களைக் கண்டறிக:

(A) செறிவு – நிறை
(B) நிறை – அறி
(C) செறிவு – மறாஅமை
(D) மறாஅமை – அறியாமை
(E) விடை தெரியவில்லை

188. கீழ்கண்டவற்றுள் பிறவினை வாக்கியம் எது?

(A) அவள் கண்டனள்

(B) அவள் கண்டுவந்தாள்

(C) அதைக் கண்டு வந்த மாணவர்

(D) இவள் காண்பித்தாள்

(E) விடை தெரியவில்லை

189. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(A) சேர்க்கிறேன்

(B) சேர்ப்பேன்

(C) சேர்கிறேன்

(D) சேர்த்தேன்

(E) விடை தெரியவில்லை

190. 'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை' - இக்குறளடி எவ்வகை வாக்கியம்?

(A) தன் வினை

(B) பிற வினை

(C) செயப்பாட்டு வினை

(D) செய்வினை வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

191. எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுக.

கிளி பழத்தைக் கொத்தித் தின்றது.

(A) செயல் வாக்கியம்

(B) பிறவினை வாக்கியம்

(C) செய்தி வாக்கியம்

(D) விழைவு வாக்கியம்

(E) விடை தெரியவில்லை

192. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வகுப்பு கலைந்தது | 1. | பண்பாகு பெயர் |
| (b) | கொழுந்து நட்டனர் | 2. | இடவாகு பெயர் |
| (c) | பொழுது சாய்ந்தது | 3. | சினையாகு பெயர் |
| (d) | கார் பெய்தது | 4. | காலவாகு பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

193. வேற்றுமை உருபினை ஏற்கும்பொழுது தன்மை, முன்னிலையில் திரியும் பெயர்களைக் கண்டறிந்து பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | யான் | 1. | உம் |
| (b) | நீர் | 2. | என் |
| (c) | யாம் | 3. | உன் |
| (d) | நீ | 4. | எம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

194. 'அறுகோணம்' என்று எவ்வகைப் பெயர் ?

(A) இடப்பெயர்

(B) தொழிற்பெயர்

(C) காலப்பெயர்

(D) வடிவப்பண்புப் பெயர்

(E) விடை தெரியவில்லை

195. அகர வரிசையில் சொற்களை சீர்செய்தல்:

(A) குங்குமம், காட்சிக்கூடம், செந்தமிழ், சொல்லேருழவர்

(B) காட்சிக்கூடம், குங்குமம், செந்தமிழ், சொல்லேருழவர்

(C) செந்தமிழ், காட்சிக்கூடம், சொல்லேருழவர், குங்குமம்

(D) சொல்லேருழவர், செந்தமிழ், காட்சிக்கூடம், குங்குமம்

(E) விடை தெரியவில்லை

196. அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல் :

(A) தென்னை, துணி, தொட்டி, திண்ணன்

(B) துணி, திண்ணன், தென்னை, தொட்டி

(C) திண்ணன், துணி, தென்னை, தொட்டி

(D) தொட்டி, தென்னை, துணி, திண்ணன்

(E) விடை தெரியவில்லை

197. "வீழ்" என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சம் கண்டறிக.

(A) வீழ்ந்த

(B) வீழ்த்துவான்

(C) வீழ்ந்து

(D) வீழ்ந்தான்

(E) விடை தெரியவில்லை

198. "வாழ்" என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் கண்டறிக.

(A) வாழ்க

(B) வாழ்தலை

(C) வாழாது

(D) வாழா

(E) விடை தெரியவில்லை

199. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | விட்ட ஆகுபெயர் | 1. | கால் வலிக்கின்றது |
| (b) | விடாத ஆகுபெயர் | 2. | என் பிழைப்புக் கெட்டது |
| (c) | எண்ணலளவை ஆகுபெயர் | 3. | புளி தின்றான் |
| (d) | காரியவாகு பெயர் | 4. | தஞ்சாவூர் வந்தது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

200. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | புளி நட்டான் | 1. | மும்மடி ஆகுபெயர் |
| (b) | கார் அறுத்தான் | 2. | இருபெயரொட்டு ஆகுபெயர் |
| (c) | அறுபதம் முரலும் | 3. | இருமடி ஆகுபெயர் |
| (d) | மக்கட்சுட்டு என்மனார் புலவர் | 4. | அடையடுத்த ஆகுபெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை